RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 265 | செப்டம்பர் 29, 2026 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# மதுரையில் 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டத்தை தொடங்கி வைத்தார் முதல்வர் விஜய்

மதுரை: செப்.29-

மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டத்தை முதல்வர் விஜய் தொடங்கி வைத்தார். முதல்கட்டமாக, மும்மதங்களையும் சேர்ந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை அணிவித்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், தாய் மாமன் தங்க மோதிரம் திட்டத்தை இன்று (செப்., 28) மதுரை அரசு ராஜாஜி மருத்துமனையில் முறைப்படி தொடங்கி வைத்தார் முதல்வர் விஜய்.

தாய்மாமன் தங்க மோதிரம் திட்ட தொடக்க விழாவுக்காக மதுரை வந்த முதல்வர் விஜய், விமான நிலையத்தில் இருந்து அரசு மருத்துவமனைக்கு சாலை வழியாகச் சென்றார். வழிநெடுகிலும் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது அப்போது, மீனாட்சி அம்மன் வேடமணிந்து நின்ற பெண் குழந்தையை கையில் தூக்கி வாஞ்சையுடன் வாழ்த்தினார் முதல்வர் விஜய்.

அதோடு, முதல்வர் வருகையை முன்னிட்டு ராஜாஜி மருத்துவமனை பகுதியே விழாக் கோலம் பூண்டிருந்தது. மாநகரப் பகுதிகளில் முதல்வர் வந்து செல்லும் சாலைகளில் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று புதுப்பொலிவுடன் காணப்பட்டன.

குழந்தைகளுக்கு பெயர் சூட்டிய முதல்வர் விஜய்:

முதல்கட்டமாக, முதல்வர் விஜய், தன்னுடன் மேடையில் இருந்த மூன்று தாய்மார்கள் கையிலிருந்த குழந்தைகளுக்கு மட்டும் மோதிரத்தை கையில் மாட்டிவிட்டார்.



தொடர்ந்து மேடைக்கு கீழே அமர்ந்திருந்த தாய்மார்கள் கையில் மோதிரத்தை வழங்கினார். அப்போது சில பெண்கள் தங்கள் குழந்தைகளுக்கும் மோதிரத்தை முதல்வரே கையில் மாட்டிவிடும்படி கேட்டுக் கொண்டனர். அவர்கள் ஆசையை நிறைவேற்றும் வகையில் அக்குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் கைகளிலேயே மோதிரத்தை மாட்டிவிட்டார்.

சில பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு பெயர் சூட்டும்படி அன்போடு கேட்டனர். அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் அவர்கள் குழந்தைகளை கையில் தூக்கி வைத்து கொஞ்சியதோடு பெயர் சூட்டினார். அப்போது ஒரு பெண், உணர்ச்சி பெருக்கத்தில் தனது குழந்தைக்கு பெயர் சூட்டிய முதல்வரைப் பார்த்து அழுதார். அந்தப் பெண்ணை முதல்வர் விஜய் கட்டிப்பிடித்து ஆறுதல்படுத்தினார்.

கடைசியாக முதல்வர் விஜய், 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டத்தில் பயனடைந்த தாய்மார்கள், அவர்கள் குழந்தைகளுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். அப்போது சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை முதல்வர் கையில் வழங்கி மகிழ்ச்சியடைந்தனர். புகைப்படம் எடுத்து முடித்தும், அனைத்து தாய்மார்களுடன் முதல்வர் விஜய் 'செல்ஃபி' புகைப்படமும் எடுத்துக் கொண்டார்.

முன்னதாகப் பேசிய அமைச்சர் அருண் ராஜ், "தாய் மாமன் தங்க மோதிரத் திட்டத்தின் தங்கத்துக்கு அரசே உத்தரவாதம். முதல் கட்டமாக 1 லட்சத்து 28 ஆயிரத்து 499 மோதிரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. பிரசவமாகி வீடு திரும்பும் போதே மோதிரங்கள் வழங்கப்படும்.

சித்திரைத் திருழாவில் தங்கைக்காக அண்ணன் சீர் சுமந்து வரும் பாசப் பூமியில் தாய்மாமன் தங்க மோதிரம் பாசத்திட்டம் தொடங்கப்படுவது பொருத்தமாக இருக்கும் என்ற அடிப்படையில் தான் 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டத்தை மதுரையில் முதல்வர் விஜய் தொடங்கி வைத்துள்ளார்" என்று கூறினார்.

## "தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்திற்கு மதுரை தேர்வானது எப்படி?" - அமைச்சர் அருண்ராஜ் சுவாரசிய தகவல்

மதுரை: செப்.29-

"சித்திரைத் திருழாவில் தங்கைக்காக அண்ணன் சீர் சுமந்து வரும் பாசப்பூமியில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் தொடங்கப்படுவதுதான் பொருத்தமாக இருக்கும் என்ற அடிப்படையில்தான் 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டத்தை மதுரையில் முதல்வர் விஜய் தொடங்கி வைத்தார்" என சுகாதாரத்துறை அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்தார்.



மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் தமிழக அரசு சார்பில் 'தாய் மாமன் தங்க மோதிரம்' திட்டம் தொடக்க விழா இன்று காலை நடந்தது. சுகாதாரத்துறை அமைச்சர்கள் அருண் ராஜ், சட்டத்துறை அமைச்சர்நிர்மல் குமார், உயர்கல்வித் துறை அமைச்சர் விஸ்வநாத், மாவட்ட ஆட்சியர் நிஷாந்த் கிருஷ்ணா, எம்எல்ஏ-க்கள் கார்த்திகேயன், கல்லாணை, கருப்பையா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சுகாதாரத்துறை அமைச்சர் அருண்ராஜ் பேசுகையில், "முச்சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மண், அன்னை மீனாட்சி கருணையோடு அருள்பாலிக்கும் மதுரையில் தாய்மாமன் சீர் பெயர் பெற்ற மண், சித்திரைத் திருழாவில் தங்கைக்காக சீர் சுமந்து வரும் பாசப்பூமியில் இந்த தாய்மாமன் தங்க மோதிரம் பாசத்திட்டம் தொடங்கப்படுவதுதான் பொருத்தமாக இருக்கும் என்று முதல்வர் திட்டமிட்டு, மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் தொடங்கி வைத்துள்ளார்.

முதற்கட்டமாக ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 499 மோதிரங்கள் கொள்முதல் செய்து தயார் நிலையில் உள்ளது. இந்த திட்டத்திற்கு மொத்தம் 4 லட்சத்து 41 ஆயிரத்து 667 மோதிரங்கள் கொள்முதல் செய்வதற்கு அரசாணை வழங்கப்பட்டுள்ளது.

தாய்மையை கொண்டாடுவது, அரசு மருத்துவச் சேவைகளில் மக்கள் நம்பிக்கையை வலுப்படுத்துவது, அரசு மருத்துவமனையை நம்பகமான பாதுகாப்பு மையமாக முன்நிறுத்துவது, அரசு மருத்துவமனை பிரசவங்களுக்கு மாண்பும், பெருமையும் சேர்ப்பது, தரமான தாய் - சேய் மருத்துவ சேவையை ஒவ்வொரு குடும்பத்திற்கும் சமமாக கிடைக்கச் செய்வது போன்ற ஐந்து நோக்கங்கள் இதில் உள்ளன.

ஆண்டுக்கு 7.8 லட்சம் பிரசவங்கள் தமிழகத்தில் நடக்கின்றன. இதில், 4.2 லட்சம் பிரசவங்கள், அதாவது 53 சதவீத பிரசவங்கள் அரசு மருத்துவமனைகளில் நடக்கின்றன. இதுவே 10 ஆண்டுக்கு முன் 2017, 2018-ம் ஆண்டில் அரசு மருத்துவமனைகளில் பிரசவம் 62% ஆக இருந்தது. பல்வேறு மகப்பேறு சேவைகளை கட்டணமில்லாமல் வழங்கியும் அதன்பிறகு பிரசவங்கள் எண்ணிக்கை அரசு மருத்துவமனைகளில் குறைந்துள்ளது. தமிழக அரசின் தாய்மாமன் திட்டத்தின் பின்னால் ஆழமான வலுமான பொருளாதார கோட்பாடு உள்ளது.

2025-ம் ஆண்டு 1.4 லட்சம் மக்களிடம் தேசிய அளவில் நடத்திய ஆய்வு முடிவுகள் படி, தமிழகத்தில் அரசு மருத்துவமனையில் ஒரு பிரசவத்திற்கும் ஒரு குடும்பம் ரூ.1,412 செலவிடுவதாகவும். அதுவே தனியார் மருத்துவமனையில் ஒரு குடும்பம் ரூ.69,914 செலவிடுவதாகவும் தெரியவந்துள்ளது. அரசு மருத்துவமனைகளை விட தனியார் மருத்துவமனைகளில் தமிழக குடும்பங்கள் 50 மடங்கு அதிகமாகச் செலவிடுகிறது.

ஒரு சாதாரண தொழிலாளியின் பல மாத வருமானம், கடன், நகை அடமானம் போன்றவை மூலம் இந்த பிரசவ செலவை சந்திக்கிறது. தங்க மோதிரத்திற்காக பிரசவத்திற்கு அரசு மருத்துவமனையை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது அல்ல அரசின் நோக்கம். தரமான மருத்துவ சேவை கிடைக்கச் செய்து, மருத்துவமனை சேவைகளை பயன்படுத்தச் செய்வதே அரசின் நோக்கம்" என்றார்.

தொடர்ந்து முதல்வர் விஜய், பட்டு வேட்டி சட்டை அணிந்து 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டத்தை தொடங்கி வைத்தார். தொடக்க விழாவில் 3 மதங்களைச் சேர்ந்த தாய்மார்களை குழந்தைகளுடன் தன்னுடன் மேடையில் அமர வைத்து அந்தக் குழந்தைகளுக்கு மோதிரத்தை முதல்வர் அணிவித்தார். தொடக்க விழாவில் மொத்தம் 27 குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை முதல்வர் விஜய் அன்போடும், பரிவுடனும் அணிவித்தார். அப்போது சில குழந்தைகளை கையில் தூக்கிக் கொஞ்சியது, தாய்மார்கள் மத்தியில் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

## "மதுரை மக்கள் மீது முதல்வர் விஜய்க்கு தனி அக்கறை" - அமைச்சர் நிர்மல் குமார்

மதுரை: செப்.29-

"மதுரை மக்கள் மீது கொண்ட தனி அக்கறை காரணமாகவே 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டத்தை முதல்வர் விஜய் இங்கு தொடங்கி வைக்கிறார்," என்று சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.



மதுரை அரசு ராஜாஜி தலைமை மருத்துவமனையில் நடைபெறும் திட்டத் தொடக்க விழா ஏற்பாடுகளைப் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மதுரை மக்களின் அன்பைப் பெற்ற முதல்வர், அவர்களது சகோதரராக இங்கு வருகிறார். இந்தத் திட்டத்தை மதுரையில் தொடங்க வேண்டும் என்பது முதல்வரின் விருப்பம்.

முதல்வர் வருகையையொட்டி பொதுமக்களுக்கும், நோயாளிகளுக்கும் எந்தவித இடையூறும் ஏற்படாத வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. முதல்வர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் வழக்கமாக பேனர்கள் வைக்கப்படுவது உண்டு. ஆனால் மதுரையில் முதல்வர் செல்லும் வழித்தடங்களில் பேனர்கள், கொடிகள் வைக்கப்படவில்லை. பொதுமக்களின் பாதுகாப்பை மட்டுமே கருத்தில் கொண்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மருத்துவமனையின் வழக்கமான செயல்பாடுகளுக்கும், நோயாளிகளுக்கும் எந்த பாதிப்பும் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆம்புலன்ஸ்களின் வழக்கமான போக்குவரத்துக்கும் இடையூறு இல்லாமல் சென்று வருகிறது.

விழா நடைபெறும் அரங்கில் குறைந்த எண்ணிக்கையிலான நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளனர். பெரும்பாலும் பயனாளிகள் மட்டுமே பங்கேற்கின்றனர். மதுரையில் பாதாள சாக்கடைத் திட்டத்துக்கு ரூ.2 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நீண்டகாலமாக நிலுவையில் இருந்த புற்றுநோய் மருத்துவமனைத் திட்டத்துக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மதுரையில் சுமார் 15 ஏக்கர் பரப்பளவில் லா ஸ்கூல் ஆஃப் எக்ஸலன்ஸ் அமைப்பதற்கான இடம் தேடும் பணி நடைபெற்று வருகிறது. இதுபோன்ற மேலும் பல திட்டங்கள் மதுரைக்கு வர உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

## ரூ.100 கோடி லஞ்சப் புகார்: அன்பில் மகேஸ் மனுவை விசாரிக்க ஐகோர்ட் ஒப்புதல்

சென்னை: செப்.29-

தனியார் பள்ளிகளுக்கு அனுமதி வழங்க ரூ.100 கோடிக்கு மேல் வசூலித்ததாக சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீஸார் பதிவு செய்த வழக்கை ரத்து செய்யக்கோரி முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் தாக்கல் செய்த மனுவை புதன்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதாக சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

முந்தைய திமுக ஆட்சிக்காலத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தனியார் பள்ளிகளுக்கு நிரந்தர அங்கீகாரம், டிடிசிபி, சிஎம்டிஏ அனுமதிகள் மற்றும் பிற சட்டப்பூர்வ அனுமதிகளைப் பெற்றுத்தருவதாகக் கூறி, ரூ.100 கோடிக்கு மேல் சட்டவிரோதமாக வசூலித்ததாக, சில மாதங்களுக்கு முன் பதிவு செய்யப்பட்ட சங்கம் ஒன்றின் தலைவர் டி.சி.



இளங்கோவன் உள்ளிட்ட பல பள்ளிகளின் நிர்வாகிகள் புகார் அளித்திருந்தனர்.

அந்தப் புகாரின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்ட சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீஸார் ஜூன் 27-ஆம் தேதி, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது. இந்த வழக்கில் கடந்த திமுக ஆட்சியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சராக இருந்த அன்பில் மகேஸ் , தனியார் பள்ளிகள் சங்கத் தலைவர் பி.டி.அரசகுமார், முன்னாள் எம்எல்ஏ முத்துகுமார், சுரேஷ், ராஜா உள்ளிட்டோர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இதில் அரசகுமார் கைது செய்யப்பட்ட நிலையில், செப்.16-ஆம் தேதி அன்பில் மகேஸின் வீடு, அலுவலகங்கள் மற்றும் அவரது உறவினர்களின் வீடுகள் உட்பட 9 இடங்களில் சோதனை நடத்தி, நூற்றுக்கும் மேற்பட்ட ஆவணங்கள் மற்றும் டிஜிட்டல் சான்றுகள் பறிமுதல் செய்யப்பட்டதாக கூறப்பட்டது. அதன்பின்னர், அன்பில் மகேஸுக்கு சம்மன் அனுப்பியதன் அடிப்படையில், செப். 18-ஆம் தேதி விசாரணைக்கு ஆஜரானார்.

இந்த நிலையில், தனக்கு எதிராக 4 பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கை ரத்து செய்யக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில், அன்பில் மகேஸ் மனு தாக்கல் செய்தார். அந்த மனுவில், வழக்கின் முதல் தகவல் அறிக்கையை தாக்கல் செய்ய விலக்களிக்க வேண்டும் எனக் கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதி வி.லட்சுமி நாராயணன் முன்பு இன்று விசாரணைக்கு வந்தபோது, அன்பில் மகஷ் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் ரிச்சர்ட்சன் வில்சன், வழக்கின் முதல் தகவல் அறிக்கை நகல் இல்லாமல், மனுவை விசாரணைக்குப் பட்டியலிட வேண்டும் என கேட்டுக் கொண்டார். இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, மனுவுக்கு எண்ணிடும் நடைமுறைகளை முடித்து, வழக்கை புதன்கிழமை விசாரணைக்குப் பட்டியலிடுமாறு பதிவுத்துறைக்கு உத்தரவிட்டார்.

## "குழந்தைகளுக்குத் தேவை தங்கம் அல்ல, தரமான பால்" - தமிழிசை

சென்னை: செப்.29-

தமிழகத்தில் நிலவும் ஆவின் பால் தட்டுப்பாட்டை உடனடியாகச் சரி செய்யாமல், குழந்தைகளுக்குத் தங்க மோதிரம் வழங்குவதில் பயனில்லை என்று பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் தனது எக்ஸ் தள பக்கத்தில், "தேவைகளை முதலில் கவனியுங்கள் முதல்வர் விஜய்.... குழந்தைகளுக்கு தேவை பால். தங்க மோதிரம் கொடுக்கப் போகிறீர்கள் தரமான பாலுக்கான தட்டுப்பாடை எப்பொழுது சரி செய்யப் போகிறீர்கள். தங்கத்தை விட தரமான பால் தான் குழந்தைகளுக்கு இன்றைய தேவை.

சென்னை மக்களின் தேவை 30 லட்சம் லிட்டர். ஆனால் 14.5 லட்சம் லிட்டர் தான் ஆவின் விநியோகிக்கிறது. ஆவின் பால் பூத்களுக்கு செல்வதற்கு முன்னாலேயே அவை விற்று தீர்ந்து விடுகிறது அதிக விலை கொடுத்து தனியார் பால் வாங்க வேண்டி இருக்கிறது.

இதுதான் இன்று தமிழக மக்கள் சொல்வது. தங்கம் மோதிரத்தை விட தங்களது தேவை இன்று பால் தான், என்று குழந்தைகள் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது



# குன்னூரில் ஆல் இந்தியா இன்ஸ்டிடியுட் ஆப் தாய்சியின் சார்பில் இரண்டு நாள் கராத்தே பயிற்சி முகாம்

நீலகிரி. செப்.29-
நீலகிரி மாவட்டம் குன்னூரில் ஆல் இந்தியா இன்ஸ்டிடியுட் ஆஃப் தாய்சி யின் கீழ் 2026 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 மற்றும் 27 ஆம் தேதிகளில் தாய்சி இரண்டு நாள் பயிற்சி முகாம் நீலகிரி மாவட்டம் குன்னூரில் நடைப்பெற்றது. இதனை மாருதி ஷிட்டோ-ரியு கராத்தே பள்ளியின் இயக்குநர் ரென்சி ம.பழனிவேல் மற்றும் சிறப்பு பயிற்சியாளர் சென்சாய் B. இணையத்துல்லா ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆல் இந்தியா இன்ஸ்டிடியுட் ஆஃப் தாய்சி யின் கிராண்ட்மாஸ்டர் சி.வேலப்பன் தாய்சி கற்பித்து பயிற்சி அளித்தார். இப்பயிற்சியில் பங்குப்பெற்ற மாணவ மாணவிகள் J. அருண்குமார், S. பசுவையா P.G.லிங்கராஜன், A.ராஜ்குமார், P.G.சிவக்குமார், M.P.பவதாரணி, M.P.கமலேஷ்வரன், D.டோனல்டென்சி, P.மோகன் தர்ஷன், R.பாபு அமித்கனாத்ரா, பரிஷத்லுப்லே ஆகியோர் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்கள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து இந்த அரிய கலை பயிற்சியில் பங்கேற்று சான்றிதழ் பெற்றனர்.




# பாடியநல்லூர் ஊராட்சியில் சிலம்ப தகுதித்தேர்வு நிகழ்ச்சி

மாதவரம், செப்.29-
மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி அருள்மிகு முனீஸ்வரர் அங்காள ஈஸ்வரி ஆலய மண்டபத்தில் 10-ம் ஆண்டு சிலம்பம் தகுதி தேர்வு நிறைவு விழா சிலம்ப ஆசான் பகவதிசந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது.ஸ்ரீகாந்த், வர்ஷணிரிஷிராம், கிரி, சிவசக்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக கவிப்பிரியா, நாகராணி, ஜானகி ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர். நிகழ்ச்சியில் பாரம்பரிய சிலம்ப கலையின் ஒரு பிரிவான கருநாடக வருசை பாட நூலின் அடிப்படையில் முறைப்படி பயிற்சி பெற்று பத்தாம் ஆண்டு தகுதித் தேர்வுவில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் விழா மற்றும் கடந்த ஓராண்டு காலமாக மண்டல,மாவட்ட, மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக செங்குன்றம் சரக எம்-4 காவல் நிலைய காவல் துணை ஆய்வாளர் கோட்டீஸ்வரன், முன்னாள் பாடியநல்லூர் ஊராட்சி மன்ற தலைவர் ஜெயலட்சுமி நடராஜன், சமூக சேவகர் எஸ்.கே.வரதன், தமிழக வெற்றிக் கழகத்தின் நிர்வாகி வினோத்குமார் ஆகியோர் கலந்துகொண்டு தகுதி தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் மண்டல, மாவட்ட, மாநில அளவில் வெற்றி பெற்ற மாணவர்களை பாராட்டி வாழ்த்தி பரிசுகளை வழங்கினர். இதில் ஆசான் வெள்ளைச்சாமி மற்றும் சங்க நிர்வாகிகள், பெற்றோர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். மேலும் இந்நிகழ்ச்சினை புஷ்பவள்ளி ஏற்பாடு செய்திருந்தனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குரூப்1 முதல்நிலைத் தேர்வு 13 மையங்களில் நடைபெற்றது. 3,844 பேர் விண்ணப்பித்த நிலையில், 2,676 பேர் தேர்வு எழுதினர்; 1,168 பேர் தேர்வில் பங்கேற்கவில்லை. தேர்வு மையங்களில் கண்காணிப்பு, போலீஸ் பாதுகாப்பு, வீடியோ பதிவு உள்ளிட்ட விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தேர்வு மையங்களை கலெக்டர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



■ திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி பொன்னாபுரம் ஊராட்சி பகுதிகளில் திமுக நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் வாக்குச்சேகரிப்பு: கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மதியழகன்,Ex. MLA., முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுகவனம், Ex.MP., வாவிபாளையம், கள்ளிப்பாளையம், தாசர்பட்டி உள்ளிட்ட பூத் எண்கள் 53, 54 பகுதிகளில் கழக நிர்வாகிகளுடன் ஆலோசனைகள் மேற்கொண்டு, தாராபுரம் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் வழக்கறிஞர் சுகன்யாவுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்தனர். உடன் பொன்னாபுரம் ஊராட்சி நிர்வாகிகள், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# நீலகிரி சமூக நல அறக்கட்டளை சார்பில் இலவச டி.என்.பி.எஸ்.சி, பயிற்சி வகுப்புகள்



நீலகிரி. செப்.29-
நீலகிரி மாவட்டம் , உதகை அரசினர் யூத் ஹாஸ்டல் வளாகத்தில், நீலகிரி சமூக நல அறக்கட்டளை சார்பில் இலவச டி.என்.பி.எஸ்.சி, பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டது,

அரசினர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதன்மையர் மரு. ஸ்ரீனிவாசன் பயிற்சி வகுப்பு வளாகத்தை திறந்து வைத்தார்.

நீலகிரி சமூக நல அறக்கட்டளையின் துணைத் தலைவர் ஜெயந்தி அனைவரையும் வரவேற்றார் , இணை செயலாளர் லேம்ஸ் ஆனந்த் மாணவர்களுக்கு ஊக்க உரை அளித்தார், நீலகிரி மாவட்ட சமூக தன்னார்வலர்கள் கூட்டமைப்பின் மாவட்ட இணைச் செயலாளர் ஜார்ஜ் பிரிட்டோ வாழ்த்துரை வழங்கினார் , மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதன்மையர் மரு. ஸ்ரீனிவாசன் அவர்கள் தலைமை உரை ஆற்றி மாணவர்களுக்கு விழிப்புணர்வு வழங்கினார் டிஎன்பிசி யின் முக்கியத்துவத்தை, நீலகிரி கல்வி அறக்கட்டளை தலைவர் ஜாபர் தனது உரையில் விரிவாக எடுத்துக் கூறினார்.

தொடர்ந்து தமிழ் ஆசிரியர் ரங்கநாதன் வகுப்புகள் நடைபெற்றது , பிரியா ஆனந்த் கணித வகுப்புகளுடன் நிறைவடைந்தது.

நீலகிரி மாவட்ட சமூக தன்னார்வலர் கூட்டமைப்பின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு லாரன்ஸ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்,

நீலகிரி சமூக நல அறக்கட்டளையின் குன்னூர் ஒருங்கிணைப்பாளர் திரு சல்மான் அவர்கள் நன்றி உரையாற்றினார்.

பயிற்சி வகுப்புகளுக்கு ஏற்பாடுகளை நீலகிரி சமூக நல அறக்கட்டளையின் தலைவர் சுரேஷ் ரமணா சிறப்பாக செய்திருந்தார்.







# ஆலந்தூரில் பள்ளி மாணவர்கள் பங்கேற்ற டெங்கு விழிப்புணர்வு பேரணி

ஆலந்தூர் செப்.29-
சென்னை அடுத்த ஆலந்தூர் நசரேத்புரம் பகுதியில் அமைந்துள்ள சி.எஸ்.ஐ. தோமா மேல்நிலைப்பள்ளியில், நாட்டு நலப்பணித் திட்டத்தின் சார்பில் சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது. கடந்த 26ஆம் தேதி தொடங்கிய இச்சிறப்பு முகாம் வரும் 2ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

இதன் ஒரு பகுதியாக, பொதுமக்களிடையே டெங்கு காய்ச்சல் மற்றும் கொசு ஒழிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் டெங்கு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

பள்ளி மாணவர்கள் 30-க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற இந்தப் பேரணி நசரேத்புரம் பகுதியில் சுமார் 3 கிலோமீட்டர் தூரம் நடைபெற்றது. பேரணியில் பங்கேற்ற மாணவர்கள், "கொசுவை ஒழிப்போம்", "நீரை தேங்க விடாதீர்கள்" உள்ளிட்ட விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியபடி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

டெங்கு காய்ச்சலைத் தடுப்பதற்கு வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்வது, கொசுக்கள் உற்பத்தியாகும் இடங்களை அகற்றுவது உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கைகள் குறித்து மாணவர்கள் பொதுமக்களுக்கு எடுத்துரைத்தனர்.

இப்பேரணியில் பள்ளியின் தாளாளர் ஜேம்ஸ் கிருபாகரன், தலைமை ஆசிரியர் எமிலி கெட்சி சூசன்னா, நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் டாக்டர் தே. ஆல்பிரட் தேவநேசன், துணை திட்ட அலுவலர் டாக்டர் பி. ஒடினா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திருப்பத்தூர் மாவட்டத்தில்

# முதன்முறையாக காணப்பட்ட ஐரோப்பிய பனங்காடை கரம்பூர் ஏரியில் பதிவு பறவை ஆர்வலர்கள் மகிழ்ச்சி

திருப்பத்தூர், செப்.29-
திருப்பத்தூர் மாவட்டத்தில் முதன்முறையாக 'ஐரோப்பிய ரோலர்' (European Roller Coracias garrulus) பறவை பதிவு செய்யப்பட்டுள்ளது. திருப்பத்தூர் மாவட்டம் கரம்பூர் ஏரியில் தற்போது காணப்பட்டுள்ள இந்த வலசைப் பறவை, பறவை ஆர்வலர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. BIRDSTPT (NGO) பல்லுயிர் பாதுகாப்புக் குழுவைச் சேர்ந்த பறவை ஆர்வலர்கள் மேற்கொண்ட கள ஆய்வின்போது இந்தப் பறவை பதிவு செய்யப்பட்டது. ஐரோப்பாவிலிருந்து இந்தியா வழியாக ஆப்பிரிக்கா வரை கண்டம் விட்டு கண்டம்



வலசை செல்லும் தன்மை கொண்ட ஐரோப்பிய பனங்காடை, நாளொன்றுக்கு சுமார் 60 முதல் 150 கி.மீ. வரை பயணிக்கக்கூடியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவிலிருந்து இந்தியாவிற்கும், இந்தியாவிலிருந்து ஆப்பிரிக்காவிற்கும், பின்னர் ஆப்பிரிக்காவிலிருந்து ஐரோப்பாவிற்கும் இடம்பெயரும் இந்தப் பறவையின் வருகை, மாவட்டத்தின் பறவை பன்முகத்தன்மையை அறிந்துகொள்ள உதவும் முக்கியப் பதிவாக அமைந்துள்ளது. இந்தத் தகவலை பறவைகள் குழுத் தலைவர் பசுமை சத்யராஜ், வனவிலங்கு மற்றும் பறவை புகைப்பட கலைஞர் மற்றும் ஆர்வலர்கள் திருமலைவாசன் மற்றும் நிரஞ்சன் ஆகியோர் தெரிவித்தனர்.

# மப்பேடு திருவஞ்சேரி வட்டார வியாபாரிகள் சங்கத்தின் 5ஆம் ஆண்டு விழா



தாம்பரம். செப்,29-
செங்கல்பட்டு மாவட்டம் பகுதியில் செயல்பட்டு வரும் மப்பேடு திருவஞ்சேரி வட்டார வியாபாரிகள் சங்கத்தின் 5ஆம் ஆண்டு விழா தலைவர் கார்த்திகேயன் செயலாளர் ஜெயக்குமார் வரவேற்புரை கூடுதல் செயலாளர் ரமேஷ்பாபு பொருளாளர் அப்துல் குத்தூஸ், காப்பாளர் பன்னீர், முன்னிலையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் சங்கத்தின் மாநில தலைவர் மற்றும் தேசிய துணைத் தலைவர் டாக்டர் ஏ.எம். விக்கிரமராஜா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மேலும், விழா ஏற்பாட்டாளர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், சங்க நிர்வாகிகள், மாவட்ட மற்றும் வட்டார நிர்வாகிகள், உறுப்பினர்கள், வணிகர்கள் மற்றும் பல்வேறு பொறுப்பாளர்கள் திரளாக கலந்து கொண்டனர். விழாவையொட்டி சங்கத்தின் சார்பில் வணிகர்களின் நலன், ஒற்றுமை மற்றும் பாதுகாப்பு தொடர்பான பல்வேறு கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டன. தொடர்ந்து சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்களுக்கு பாராட்டுகளும், வாழ்த்துகளும் தெரிவிக்கப்பட்டன. விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது மப்பேடு திருவஞ்சேரி வட்டார வியாபாரிகள் சங்கத்தின் 5ஆம் ஆண்டு விழா, வணிகர்கள் மற்றும் சங்க நிர்வாகிகளின் ஒற்றுமைய வெளிப்படுத்தும் வகையில் சிறப்பாக நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் ஜெமின், மாவட்ட பொருளாளர் பாலமுருகன், மாவட்ட செய்தி தொடர்பாளர் வி.பாபு, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர். மாதவன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர்கள் பிலோமினா தர்மராஜ், பத்மாவதி திருவேங்கடசாமி, மற்றும் மாநில நிர்வாகிகள் மாவட்ட நிர்வாகிகள் செயற்குழு உறுப்பினர்கள் இளைஞர் அணி நிர்வாகிகள் மற்றும் திருவஞ்சேரி வட்டார வியாபாரி சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




# தேனி மாவட்டம் முத்து தேவன் பட்டி கிராம மக்கள் கலெக்டர் அலுவலகம் முன் ஆர்பாட்டம்

தேனி செப்.29-
தேனி முத்து தேவன்பட்டி பொதுமக்கள் பட்டா வழங்க கோரியும் வழங்கிய பட்டாவை உறுதி செய்யக்கோரியும் தேனி ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அனைவரையும் ஊர் தலைவர் சக்தி முருகன் வரவேற்றார் தலைமை பூ மணிகண்டன் மாவட்ட செயலாளர் திராவிட கழகம் முன்னிலை திமுக சார்பில் வழக்கறிஞர் பிரிவு நிஷாந்த். பேரூர் செயலாளராக திமுக பேரூர் செயலாளர் செல்வராஜ் விசிக மாவட்ட செயலாளர் வழக்கறிஞர் சுசி தமிழ் பாண்டியன் மாவட்ட பொருளாளர் அன்பு வடிவில் மாவட்ட செய்தி தொடர்பாளர் ஈஸ்வரன் Cpl(m) தருமர் தாலுகா செயலாளர் நாகராசான் மாவட்ட குழு எஸ்டிபிஐ கட்சி மாவட்ட தலைவர் அபூபக்கர் சித்திக் மற்றும் போடி தொகுதி மகளிர் அணி எஸ் டிடிபி ஐ நிர்வாகிகள் போடி தொகுதி செயலாளர் முகமது உமர். ஆதித்தமிழர் பேரவை மாவட்ட செயலாளர் நீலக் காணலன். மாநில செய்தி தொடர்பாளர் ஆபே சுரேஷ் மக்கள் விடுதலைக் கட்சி மாவட்ட செயலாளர் பூமிநாதன் இளைஞர் அணி தலைவர் ஈஸ்வரன் ஆதித்தமிழர் கட்சி முல்லை அழகர் மாவட்ட செயலாளர் ராமசாமி மனிதநேய மக்கள் கட்சிமாவட்ட செயலாளர் அப்பாஸ் மந்திரி தமிழ் தேசிய மார்க்சிய கழகம்தோழர் மதியவன் இரும்பறை. புதிய தமிழகம் கட்சி மாவட்ட செயலாளர் இளையராஜா முன்னாள் மாவட்ட செயலாளர் தங்கபாண்டியன் விவசாய தொழிலாளர் சங்கம் ராஜேந்திரன் சமூக நல்லிணக்க பேரவை முகமது சபி ஆகியோர் கண்டன உரையாற்றினர். தேசிய முற்போக்கு திராவிட கழகம் கருப்புசாமி. ஊர் பொறுப்பாளர்கள் குலசேகரன் ராஜசேகரன் சென்ராயன் சமூக ஆர்வலர் ரகுமான் வழக்கறிஞர்கள் அனிதா நாகேந்திரன் உட்பட 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு கண்டன கோசமிட்டு துணை ஆட்சியர் அவர்களிடம் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியின் முடிவில் ஊர் செயலாளர் பால்ராஜ் அவர்கள் நன்றி கூறினார்.

# கல்விப் பணியில் சிறந்து விளங்கிய ஆசிரியர் அ.தீபாவுக்கு 'அறிவுச்சுடர்' விருது : காரைக்குடி சிட்டி அரிமா சங்க முப்பெரும் விழாவில் கௌரவிப்பு




சிவகங்கை: செப்.29-

அகில உலக அரிமா சங்கம் மற்றும் காரைக்குடி சிட்டி அரிமா சங்கம் இணைந்து நடத்திய முப்பெரும் விழாவில், சாக்கோட்டை ஒன்றியம் கருவியப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வரும் அ. தீபா, M.A., B.Ed., அவருக்கு 'அறிவுச்சுடர்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

காரைக்குடி வளர்தமிழ் நூலகத்தின் தொல்காப்பியர் அரங்கத்தில் செப்.26-ஆம் தேதி நடைபெற்ற விழாவில், காலத்திற்கேற்ப நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி கல்விப் பணியில் சிறப்பாக செயல்பட்டு வரும் 50 ஆசிரியர்களுக்கு 'அறிவுச்சுடர்' விருது வழங்கப்பட்டது.

இதில், மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்காக சிறப்பாகப் பணியாற்றி வரும் ஆசிரியர் அ. தீபாவுக்கும் அறிவுச்சுடர் விருது வழங்கப்பட்டது.

விழாவிற்கு மாவட்டத் தலைவர் டென்சிங் அருள்ராஜ் தலைமை வகித்தார். PMJF LION N. ஆறுமுகம் மற்றும் ராசி மோட்டார்ஸ் உரிமையாளர் திருமதி சாண்டியாகு ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

மேலும், தேவகோட்டை மாவட்டக் கல்வி அலுவலர் செந்தில்குமரன், வட்டார வளமைய மேற்பார்வையாளர் செல்வகுமார், சாக்கோட்டை வட்டாரக் கல்வி அலுவலர் திருமதி ரேவதி மற்றும் அரிமா சங்க நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், நேற்று தமிழ்நாடு அரசு தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் தொடங்கி வைத்ததையொட்டி, சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ், தமிழ்நாடு அரசு தாய்மாமன் தங்க மோதிரத்தை குழந்தைகளுக்கு வழங்கினார். உடன் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் கலைவாணி, மாவட்ட சுதாதர அலுவலர் மரு.எஸ். மீனாட்சி மற்றும் அரசு மருத்துவ அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

# மைக்ரோ பிளாஸ்டிக் எச்சரிக்கை வாசகங்கள்: உத்தரவை மறு ஆய்வு செய்ய சென்னை உயர்நீதிமன்றம் மறுப்பு!



சென்னை. செப்.29-

குடிநீர் பாட்டில்களிலும், உப்பு, சர்க்கரை பாக்கெட்களிலும், "மைக்ரோ பிளாஸ்டிக் இருக்கலாம்" என்ற எச்சரிக்கை வாசகங்கள் இடம்பெற வேண்டும் என ஏற்கனவே பிறப்பித்த உத்தரவை மறு ஆய்வு செய்ய சென்னை உயர்நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

"மைக்ரோ பிளாஸ்டிக் துகள்கள் இருக்கலாம்" என சிவப்பு நிறத்தில் எச்சரிக்கை வாசகங்கள் இடம்பெறச் செய்ய வேண்டும் என கடந்த பிப்ரவரி 6ல் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவை மறு ஆய்வு செய்யக் கோரி, இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் தாக்கல் செய்த மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

தனது மறுஆய்வு மனுவில், இவ்விஷயம் குறித்த ஆராய்ச்சி இன்னும் முடிவுக்கு வரவில்லை என்றும், எனவே, இதுபோன்ற எச்சரிக்கைகளைக் காட்சிப்படுத்துவதன் மூலம் "பொதுமக்களிடையே பீதியை" ஏற்படுத்துவது பொருத்தமற்றதாக இருக்கலாம் என்றும் FS-SAI வாதிட்டிருந்தது.

மேலும், மைக்ரோ மற்றும் நானோ பிளாஸ்டிக்குகள் தொடர்பாக இதுவரை எந்த நாடும் விதிமுறைகளைக் கொண்டுவரவில்லை என்று கூறிய FSSAI, "அத்தகைய லேபிளிங் தேவை நடைமுறைக்குச் சாத்தியமற்றது மற்றும் உணவு வணிக நிறுவனங்களுக்கு (FBOs) கூடுதல் சுமையை ஏற்படுத்தும். வெளிநாட்டினர் இந்தியாவிற்கு வரும்போது, உணவுப் பொருட்களில் அவற்றைக் கண்டு பீதியை ஏற்படுத்த வாய்ப்புள்ளது" என்று தெரிவித்தது.

பிளாஸ்டிக் உறையின் காரணமாக தண்ணீர், சர்க்கரை அல்லது உப்பு பாதுகாப்பற்றதாகிறது என்று நீதிமன்றம் முடிவு செய்யவில்லை என்றும், மாறாக, நுகர்வோர் நுகர்வதற்கு முன்பு தகவலறிந்து முடிவெடுக்க ஏதுவாக, லேபிள்களில் ஒரு எச்சரிக்கையை வெளியிட மட்டுமே உத்தரவிட்டுள்ளது என்றும் குறிப்பிட்ட நீதிபதிகள் என். சதீஷ் குமார் மற்றும் டி. பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய சிறப்பு அமர்வு, மறுஆய்வு மனுவைத் தள்ளுபடி செய்தது.




■ சிவகங்கை மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை அலுவலர்கள் நேற்று 28.09 2026 மதியம் சுமார் 03.45. PM மணி அளவில் அரளிக்கோட்டை-To- கீழவளவு செல்லும் சாலையில் கணேசபுரம் எனும் இடத்தில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த பொழுது உரிய அனுமதியின்றி தலா ஒரு யூனிட் வண்டல் மண் ஏற்றி வந்த இரண்டு டிராக்டர் வாகன எண் 1.TN-63-CD-7929, 2.TN-63-BJ-4632 கைப்பற்றப்பட்டு திருக்கோஷ்டியூர் காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய கோரி புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

# "தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் மீது வழக்குப் பதிந்து கைது செய்ய வேண்டும்" - ப.சிதம்பரம்

காரைக்குடி, செப்.29-

"வாக்கு திருட்டு தொடர்பாக தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் மீது வழக்கு பதிந்து கைது செய்ய வேண்டும்" என முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் வலியுறுத்தினார்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி 5 விளக்கு பகுதியில் காங்கிரஸ் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு பேசிய முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், வாக்காளர் பட்டியல் திருத்தம் என்பது மிகப்பெரிய சதி. அது ஜனநாயக விரோதமான செயல். 13.30 கோடி பேரை வாக்களிக்க விடாமல் செய்து வாக்குத் திருட்டு தானே? வாக்கு திருட்டை கண்டித்து ராகுல் காந்தி போராடுகிறார். இதில் ராகுல் காந்தி கரத்தைப் பலப்படுத்துவோம்.

வாக்கு திருட்டு தொடர்பாக தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் மீது வழக்கு பதிந்து கைது செய்ய வேண்டும். வாக்காளர் பட்டியல் திருத்தத்தை நிறுத்த வேண்டும். நீக்கப்பட்ட 13.30 கோடி பேரை மீண்டும் வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும்." என்று ப.சிதம்பரம் கூறினார்.



# மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தல் பணிகளில் திமுக அனைத்து சார்பு அணிகளும் களத்தில் இறங்கி தேர்தல் பணியாற்றி வருகிறது

மதுராந்தகம். செப்.29-

மதுராந்தகம் தொகுதி இடைத்தேர்தல் பணிகளில் திமுக அனைத்து சார்பு அணிகளும் களத்தில் இறங்கி தேர்தல் பணியாற்றி வருகிறது...

அதனடிப்படையில், மாநில மாற்றுத்திறனாளிகள் அணி நிர்வாகிகளும் தங்களது பங்களிப்பாக தேர்தல் களப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்...

அந்த வகையில் அணி மாநிலச்செயலாளர், பேராசிரியர் தீபக்நாதன் தலைமையில், மாநிலத்தலைவர் தங்கம், மாநிலத் துணைச்செயலாளர்களான, சிவகங்கை தவழும் மாற்றுத்திறனாளிகள் தாய் இல்ல நிர்வாகியான கே. ஜே. டி. மலர்மன்னன் என்ற புஷ்பராஜ், எழிலன், வேங்கை வெங்கடேஷ், கருணாகரன், வசந்தகுமார், ஜெயராமன், அம்பாள் குமார், சாஹுல் ஹமீது, திமுக மாவட்ட சுற்றுசூழல் அணி மாவட்ட அமைப்பாளர் வெங்கடேசன், மாவட்ட கவுன்சிலர் மான் குமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு மதுராந்தகம் திமுக வேட்பாளர் வழக்கறிஞர் பரந்தாமனுக்கு உதயசூரியன் சின்னத்திற்கு ஆதரவு கோரி தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.



■ கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு மைதானத்தில் ராணுவ ஆள்சேர்ப்பு முகாம் நடைபெற்று வருகிறது. கடந்த 25-ம் தேதி தொடங்கிய முகாம் அக்டோபர் 7-ம் தேதி வரை நடைபெறுகிறது. முகாமில் குடிநீர், மருத்துவம், உணவு மற்றும் பாதுகாப்பு வசதிகளை கலெக்டர் தினேஷ்குமார் ஆய்வு செய்தார். தேர்வானவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை உள்ளிட்ட பணிகளும் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

# தேனி மாவட்டம் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ் அரசுமருத்துவமனைகளில் பிறந்த குழந்தைகளுக்கு தாய்மாமன் தங்க மோதிரத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் வைத்திநாதன் வழங்கி சிறப்பித்தார்




பெரியகுளம் செப்.29-

தமிழ்நாடு முதலமைச்சர் மதுரை இராசாசி அரசு மருத்துவமனையிலிருந்து தமிழ்நாடு முழுவதும் "தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை" காணொளிக்காட்சி வாயிலாக தொடங்கி வைத்ததைத்தொடர்ந்து, தேனி மாவட்டம், பெரியகுளம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு மருத்துவமனைகளில் பிறந்த குழந்தைகளுக்கு தாய்மாமன் தங்க மோதிரத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா. வைத்திநாதன், வழங்கி சிறப்பித்தார்.

அரசு மருத்துவ மனைகளில் பிரசவத்தை ஊக்குவித்தல், தாய் மற்றும் சேய் நலம் பேணுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு, தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் ஜூன் 22, 2026 முதல் பிறக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் தாய்மாமன் தங்க மோதிரத் திட்டத்தின் கீழ் ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இன்று இத்திட்டம்தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், தேனி மாவட்டத்தில் உள்ள அரசுமருத்துவமனைகளில் பிறக்கும்குழந்தைகளுக்கு தங்க மோதிரங்கள் வழங்கும் விதமாக தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, பெரியகுளம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மற்றும் கம்பம் அரசு மருத்துவமனை ஆகிய இடங்களிலிருந்து மாவட்டத்தின் பிற அரசு மருத்துவமனைகள், துணை சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு எடுத்துச் சென்று, அங்கு பிரசவிக்கும் தாய்மார்களுக்கு வழங்கும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேனி மாவட்டத்தில் பெரியகுளம் மருத்துவ வட்டாரத்தில் 429 குழந்தைகளுக்கும், தேனி மருத்துவ வட்டாரத்தில் 376 குழந்தைகளுக்கும், ஆண்டிபட்டி மருத்துவ வட்டாரத்தில் 340 குழந்தைகளுக்கும், போடிநாயக்கனூர் மருத்துவ வட்டாரத்தில் 325 குழந்தைகளுக்கும், கடமலைக்குண்டு மயிலாடும்பாறை மருத்துவ வட்டாரத்தில் 185 குழந்தைகளுக்கும், கம்பம் மருத்துவ வட்டாரத்தில் 338 குழந்தைகளுக்கும், சின்னமனூர் மருத்துவ வட்டாரத்தில் 268 குழந்தைகளுக்கும், உத்தமபாளையம் மருத்துவ வட்டாரத்தில் 282 குழந்தைகளுக்கும் என மொத்தம்

2,543 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கப்பட உள்ளது. மேலும், இனிவரும் காலங்களில் அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகள், மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பும் நாளில் தாய்மாமன் தங்கமோதிரம் (ஒரு கிராம்) வழங்கி வழியனுப்பி வைக்கப்படுவார்கள்.

தாய்மாமன் தங்கமோதிரம் பெற்ற குழந்தைகளின் தாய்மார்கள் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கையில் என் பெயர் ராமுத்தாய் ராசி. நான் தேனி மாவட்டம், பெரியகுளம் வடகரை மூங்கில்கார படித்துரை தெருவில் வசிக்கின்றேன். எனக்கு பெரியகுளம் அரசு மருத்துவமனையில் கடந்த ஜூன் மாதம் பெண் குழந்தை பிறந்தது. என் குழந்தையின் பெயர் மகிழினி தமிழ்நாடு முதலமைச்சர் அறிவிப்பிற்கிணங்க தாய்மாமன் தங்க மோதிரத் திட்டத்தின் கீழ் இன்று என் குழந்தைக்கு ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்பட்டுள்ளது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இதனை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என் பெயர் கீர்த்தனா, நான் பெரியகுளம் வடகரை கிருஷ்ணாபுரம் தெருவில் வசித்து வருகின்றேன். எனக்கு பெரியகுளம் அரசு மருத்துவமனையில் கடந்த ஜுன் மாதம் பெண் குழந்தை பிறந்தது. என் குழந்தையின் பெயர் ரிதன்யா. தாய்மாமன் தங்க மோதிரத் திட்டத்தின் கீழ் இன்று என் குழந்தைக்கு ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை தொடங்கி வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நிகழ்வில் சார் ஆட்சியர் (பெரியகுளம்) .தவலேந்து, மாவட்ட சுகாதார அலுவலர் மரு. வரதராஜன், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) (பொ).அன்புச்செழியன், மருத்துவக் கண்காணிப்பாளர் மரு. குமார் உட்பட மருத்துவர்கள், செவிலியர்கள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



# பழனி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் தாய்மாமன் தங்க மோதிரம் வழங்கும் விழா நிகழ்ச்சி

திண்டுக்கல். செப்.29-

திண்டுக்கல் மாவட்டம் பழனி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் தமிழக அரசின்i மூலம் செயல்படுத்தப்பட்ட தாய்மாமன் தங்க மோதிரம் வழங்கும் திட்டம் நடைபெற்றன..

பழனி மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை பிறந்த 26 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் விழா நிகழ்ச்சி நடைபெற்றன..

இந்நிகழ்வில் தலைமையாக மாவட்ட இணை இயக்குனர் பாரதி மாவட்ட தலைமை மருத்துவர். உதயகுமார் ஆகியோர் தலைமை நடைபெற்றன.

தொடர்ந்து இவ்விழாவின் சிறப்பு அழைப்பாளர்களாக தமிழக வெற்றிக் கழகத்தின் மாவட்ட செயலாளர் கார்த்திக் ராஜன் மாவட்ட பொதுக்குழு உறுப்பினர் பாலன் நகர செயலாளர் மீதுன் மாவட்ட இணைச் செயலாளர் நாகராஜ் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு மருத்துவமனையில் பிறந்த 26 குழந்தைகளுக்கு தாய்மாமன் தங்க மோதிரம் வழங்கப்பட்டன.

தொடர்ந்து இவ்விழாவில் நகராட்சி ஆணையர் ராஜலட்சுமி மாவட்ட சுகாதார அலுவலர் இந்திரா மருத்துவர். வருன்பிரசாத் மருத்துவர். கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தைத் தொடங்கி வைப்பதற்காக மதுரைக்கு வருகை தந்தபோது, பெருந்திரளான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்த நிகழ்வில், மீனாட்சி அம்மன் வேடமிட்ட குழந்தையைத் தூக்கிவைத்து, பொதுமக்களை நோக்கிக் கையசைத்தார்.





# காந்தி சிலைக்கு மாலை அணிவித்து புனரமைக்கப்பட்ட அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார் முதலமைச்சர் விஜய்

மதுரை, செப்.29-

மதுரையில் காந்தி நினைவு அருங்காட்சியக வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு முதலமைச்சர் விஜய் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, ரூ.10.25 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்ட காந்தி நினைவு அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார். பின்னர் அருங்காட்சியகத்தை பார்வையிட்ட முதலமைச்சர், காந்தியின் வாழ்க்கை மற்றும் விடுதலைப் போராட்டம் தொடர்பான காட்சிப்பொருட்களை பார்வையிட்டார். புதுப்பிக்கப்பட்ட அருங்காட்சியகத்தில் டிஜிட்டல் மற்றும் தொடுதிரை தொழில்நுட்பங்களுடன் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.





■ திருப்பூர் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி. அமித் ஐ.ஏ.எஸ்., மண்டலம்4, சுண்டமேடு பகுதியில் உள்ள நுண் உரம் செயலாக்க மையத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள இயந்திரத்தின் செயல்பாடுகளை (MCC Centre) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாநகர நல அலுவலர் மரு. மோகன், சுகாதார அலுவலர் ராஜேந்திரன், உதவி பொறியாளர் பூபால்ராஜ் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# மேலூர் அருகே 125 குடும்பங்களுக்கு தனிநபர் பட்டா மற்றும் நிலம் அளந்து வழங்க கோரிக்கை: சமூக ஆர்வலர் உமாதேவி தமிழக முதலமைச்சருக்கு வேண்டுகோள்

மேலூர் செப்.29-

மதுரை மாவட்டம் மேலூர் வட்டம், புலிப்பட்டி பஞ்சாயத்துக்கு உட்பட்ட புலிப்பட்டி கிராமத்தில் வசிக்கும் பட்டியல் சாதி (இந்து பறையர்) சமூகத்தைச் சேர்ந்த 125 குடும்பங்களுக்கு முறைப்படி நிலத்தை அளந்து வழங்கி, தனிநபர் பட்டா வழங்க வேண்டும் என தமிழக முதலமைச்சருக்கு சமூக ஆர்வலர் உமாதேவி கோரிக்கை விடுத்துள்ளார்.



இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில் தெரிவித்திருப்பதாவது:

"புலிப்பட்டி கிராமத்தில் உள்ள மக்களுக்குக் கடந்த 2010-ஆம் ஆண்டு 125 பேருக்கு அனாமத்து பட்டா வழங்கப்பட்டது. அப்போது பொதுவான இடம் காண்பிக்கப்பட்டதே தவிர, இதுவரை பயனாளிகள் தனிநபருக்கு உரிய நிலம் அளந்து கொடுக்கப்படவில்லை. இதுதொடர்பாக பாதிக்கப்பட்ட 125 குடும்பங்களும் அரசு அதிகாரிகளிடம் பலமுறை மனு அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதையடுத்து, கடந்த 20.07.2026 அன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டது. அந்த மனுவின் அடிப்படையில் மாவட்ட வருவாய் அலுவலர் (DRO) முன்னிலையில் விசாரணை நடத்தப்பட்டு, பயனாளிகளின் ஆவணங்கள் சேகரிக்கப்பட்டன. பின்னர், மேலூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு உரிய கடிதம் அனுப்பப்பட்டு, கடந்த 15.09.2026 அன்று மேலூர் வட்டாட்சியரிடம் ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டன. இருப்பினும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதிகாரிகள் தரப்பில் முறையான பதில் அளிக்கப்படவில்லை.

எனவே, ஏழை மக்களின் சமூக மற்றும் பொருளாதாரப் பின்னணியைக் கருத்தில் கொண்டு, 125 பயனாளிகளுக்கும் தனித்தனியாக நிலத்தை அளந்து வழங்கி, முறையான தனிநபர் பட்டா வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், அரசு சார்பில் கட்டப்படும் 'வெற்றி வீடு' திட்டத்தின் கீழ் இவர்களுக்கு வீடுகள் கட்டித் தரவும் ஆவன செய்ய வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

# ஆகாஷ் டெலிஷன் மரண வழக்கு: வீட்டில் பலத்த போலீஸ் பாதுகாப்பு!

மானாமதுரை, செப்.29-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் ஆகாஷ் டெலிஷன் மரண வழக்கில் நீதி கோரி அவரது குடும்பத்தினர் தொடர்ந்து வலியுறுத்தி வரும் நிலையில், முதலமைச்சர் விஜயின் மதுரை வருகையை முன்னிட்டு ஆகாஷின் வீட்டில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.





சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கிருஷ்ணராஜபுரத்தைச் சேர்ந்த ஆகாஷ் டெலிஷன் மரணம் தொடர்பான வழக்கை சிபிசிஐடி விசாரித்த நிலையில், 6 காவலர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆகாஷின் குடும்பத்தினர் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், முதலமைச்சர் விஜய் மதுரை வருகையையொட்டி, ஆகாஷின் குடும்பத்தினர் போராட்டம் அல்லது மனு அளிக்க வாய்ப்புள்ளதாகக் கருதப்பட்ட நிலையில், அவரது வீட்டில் ஏடிஎஸ்பி பிரான்சிஸ் தலைமையில் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது

மேலும், மானாமதுரை நகரின் முக்கிய பகுதிகளிலும் போலீசார் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஆகாஷ் டெலிஷன் மரண வழக்கு தற்போது சிவகங்கை சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

# கருவேல மரங்களுக்கு 'செக்'!

## கட்டிகுளம் கண்மாயில் 1,000 பனை விதைகள் நடவு மேட்டுமடை கிராம இளைஞர்களின் பசுமை முயற்சி கண்மாயை பசுமையாக்க புதிய திட்டம்

சிவகங்கை,செப்,29-

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம் கட்டிகுளம் கண்மாயில் நடைபெற்று வரும் பணிகளுக்கு மத்தியில், மேட்டுமடை கிராம இளைஞர்கள் 1,000 பனை விதைகளை நடும் முயற்சியில் ஈடுபட்டனர்.





கட்டிகுளம் கண்மாயில் சில நாட்களுக்கு முன்பு சிவகங்கை மாவட்ட ஆட்சியர் ப.ஆகாஷ் பணிகளை தொடங்கி வைத்தார். தற்போது கண்மாயில் பல்வேறு பணிகள் நடைபெற்று வரும் நிலையில், மேட்டுமடை கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் ஒன்றிணைந்து கண்மாய் பகுதிகளில் 1,000 பனை விதைகளை நடவு செய்யும் பணியை மேற்கொண்டனர்.

கண்மாய் பகுதியில் அதிகளவில் காணப்படும் கருவேல மரங்களை முற்றிலும் அகற்றி, அதற்கு மாற்றாக பனை மரங்களை வளர்ப்பதே தங்களது நோக்கம் என இளைஞர்கள் தெரிவித்தனர்.

கண்மாய் மற்றும் சுற்றுப்புற பகுதிகளை பசுமையாக்கும் இளைஞர்களின் இந்த முயற்சிக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்தனர்.

# மானாமதுரை பகுதிகளில் நாளை 4 மணி நேரம் மின்தடை

சிவகங்கை. செப்.29-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சிப்காட் துணை மின்நிலையத்தில் மாதாந்திர பராமரிப்புப் பணிகள் நடைபெற உள்ளதால், நாளை (செப்.30) காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை மின் விநியோகம் நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



இதன்படி மானாமதுரை, சிப்காட், ராஜகம்பீரம், கட்டிக்குளம், மிளகனூர், முத்தனேந்தல், தெ.புதுக்கோட்டை, கீழப்பசலை, சங்கமங்கலம், குறிச்சி, முனைவென்றி, கச்சாத்தநல்லூர், நல்லாண்டிபுரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மின் விநியோகம் இருக்காது என மின் செயற்பொறியாளர் தேன்மொழி தெரிவித்துள்ளார்.

**வருவாய் கோட்டாட்சியர் சிவகங்கை**

**ஓ. மு. அ. 3/1002/2025-6**

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டம், க.எண்:375 அதப்படக்கி கிராமம் என்ற முகவரியில் வசித்து வரும் திரு. ஆறுமுகம் த / பெ. கருப்பன் என்பவரின் ஐயா ஆறுமுகம் என்பவர் கடந்த 1955-ம் ஆண்டு சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் வட்டம் அதப்படக்கி கிராமத்தில் இறந்து விட்டார். அன்றைய சூழ்நிலையில் மேற்படி இறப்பு பதிவு செய்யப்பட்டவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக் கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் மனு நீதிமன்றத்தில் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபனை ஏதும் வரப் பெறவில்லையெனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறு இறப்பினை பதிவு செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது..

**மனுதாரர்**
**திரு.ஆறுமுகம்**
**க.எண்: 375, அதப்படக்கி கிராமம் காளையார் கோவில் வட்டம் சிவகங்கை மாவட்டம்**
**எதிர்மனு**
**1. வட்டாட்சியர் காளையார் கோவில்**

**வருவாய் கோட்டாட்சியர் சிவகங்கை**

**ஓ.மு.அ. 3/1002/2025-7**

சிவகங்கை மாவட்டம், காளையார் கோவில் வட்டம், க. எண்: 375 அதப்படக்கி கிராமம் என்ற முகவரியில் வசித்து வரும் திரு. ஆறுமுகம் த /பெ. கருப்பன் என்பவரின் பெரியப்பா ராக்கன் என்பவர் கடந்த 1972 -ம் ஆண்டு காளையார் கோவில் வட்டம் அதப்படக்கி கிராமத்தில் இறந்து விட்டார். அன்றைய சூழ்நிலையில் மேற்படி இறப்பு பதிவு செய்யப்பட்டவில்லை. இந்த இறப்பு பதிவினை பதிவு செய்யக் கேட்டு சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் மனு நீதிமன்றத்தில் செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறப்பினை பதிவு செய்வது தொடர்பாக எவருக்கேனும் ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து 10 தினங்களுக்குள் சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம். அவ்வாறு ஆட்சேபனை ஏதும் வரப் பெறவில்லையெனில் விசாரணை மற்றும் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதார் கோரியவாறு இறப்பினை பதிவு செய்ய தகுந்த உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**மனுதாரர்**
**திரு.ஆறுமுகம்**
**க.எண்:375, அதப்படக்கி கிராமம், காளையார் கோவில் வட்டம், சிவகங்கை மாவட்டம்**
**எதிர்மனு**
**1. வட்டாட்சியர் காளையார் கோவில்**

# உதகை சேரிங்கிராஸ் கோ - ஆப்டெக்ஸ் தீபாவளி சிறப்பு தள்ளுபடி விற்பனையை மாவட்ட ஆட்சித்தலைவர் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்

நீலகிரி. செப்.29-

நீலகிரி மாவட்டம், உதகை சேரிங்கிராஸ் கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தில், தீபாவளி 2026 சிறப்பு தள்ளுபடி விற்பனையை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு குத்து விளக்கேற்றி வைத்து, பார்வையிட்டு முதல் விற்பனையை துவக்கி வைத்து தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு அரசின் மாபெரும் கூட்டுறவு நிறுவனமான கோ-ஆப்டெக்ஸ் கடந்த 91 ஆண்டுகளாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தமிழக நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் இரகங்களை கொள்முதல் செய்து இந்தியா முழுவதும் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலமாக சந்தைப்படுத்தி, நெசவாளர்களுக்கு பேருதவி புரிந்து வருகிறது.

கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் காஞ்சிபுரம், சேலம், கோவை, மென்பட்டு, ஆரணி, தஞ்சை போன்ற பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பட்டுச்சேலைகள் வாடிக்கையாளர்களின் பெரும் வரவேற்பை பெற்றுத் திகழ்கின்றன. மேலும், தீபாவளி 2026 சிறப்பு விற்பனைக்காக கைத்தறி இரகங்களுக்கு கோ-ஆப்டெக்ஸின் அனைத்து விற்பனை நிலையங்களிலும் 15.09.2026 முதல் 30% அரசு சிறப்புத் தள்ளுபடி வழங்குகிறது. அரசு பணியாளர்களுக்கும் தனியார் நிறுவனப் பணியாளர்களுக்கும் கடன் விற்பனை நடைபெற்று வருகிறது.



தீபாவளி 2026 விற்பனைக்காக புதிய இரகங்களான பிரிண்டட் சட்டைகள், பிரிண்டட் குர்த்தீஸ்கள், பாலிரயான் எம்ப்ராய்டரி குர்த்தி, ஸ்ட்ரெய்ட் பேண்ட், சக்கரா பேண்ட் வித் கிராப்டாப், பலாசோபேண்ட் வித் கிராப் டாப் செட், தோத்தி வித் கிராப் டாப், காட்டன் ஸ்லப் பிரிண்டட் குர்த்தீஸ், காட்டன் ஸ்லப் கலம்கரி குர்த்தீஸ், சிறுமிகளுக்கான பட்டு பாவாடை சட்டை இரகங்கள், புதிய வண்ணங்கள் மற்றும் வடிவமைப்புகளில் உருவாக்கப்பட்ட காட்டன் சேலைகள், நைட்டிகள்,

ஆடவர்களுக்கான லினன், ரிங்க்கிள் ஃப்ரீ, ஸ்லிம் ஃபிட், ரெடிமேட் சட்டைகள் ஏராளமாக வரவழைக்கப்பட்டு உள்ளன. வாடிக்கையாளர்களின் வசதிக்காக ஞாயிறு உட்பட அனைத்து விடுமுறை நாட்களிலும் விற்பனை நிலையங்கள் செயல்படும். கோ ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்திற்கு தீபாவளி 2026 விற்பனை குறியீடாக ரூ.85 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள், வாடிக்கையாளர்கள், சுற்றுலாப்பயணிகள் தள்ளுபடி விலையில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பல்வேறு இரகங்களை பெற வர வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், கோ ஆப்டெக்ஸ் மண்டல மேலாளர் இராஜேஷ், மேலாளர் (வ&உ) .அய்யப்பன், உதகை வட்டாட்சியர் திரு.சதீஷ்வர நாயக், ஊட்டி விற்பனை நிலைய மேலாளர் சபீனாநாஸ் உட்பட பலர் உடனிருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161